உ
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சகாயம்

# சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

போன் : 04575 - 241233

அனுப்புனர்
**பா.இளங்கோ** பி.காம்., பி.எல்.,
தேவஸ்தானம் மேலாளர்,
எண்.99 பழைய அரண்மனை வளாகம்
சிவகங்கை – 630 561.
சிவகங்கை மாவட்டம்
E-mail ID : managersivagangaidevasthanam@gmail.com

பெறுநர்

இணை ஆணையர்,
இந்துசமய அறநிலையத்துறை,
சிவகங்கை

ந.க.எண். D4 980/2022 நாள் : 26.05.2022

ஐயா,

பொருள்– சிவகங்கைசமஸ்தானம்தேவஸ்தானம், திருப்புவனம்
அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில் –
கருமகிரி பொட்டல் 1432ம் பசலிக்கு மகமை வசூல்
செய்ய பொதுஏலம்/டெண்டர் 15.06.2022ந்தேதி
நடத்துவதற்கு அனுமதி வேண்டல் – சம்மந்தமாக

பார்வை– சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேதகு பரம்பரை அறங்காவலர்/
ராணி சாஹிபா அவர்கள் தீர்மானம் எண் 4088 நாள் 26.05.2022

---

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக் கோயிலுக்குப்பாத்தியப்பட்ட கருமகிரிபொட்டல் 1432ம் பசலிக்கு ( 01.07.2022 முதல்30.06.2023 முடிய ) பொதுஏலம்/டெண்டர் நடத்துவதற்கு சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை உதவிஆணையர் அவர்களை கலந்து 15.06.2022 ந்தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஷ ஆலயத்தில் வைத்து நடத்த நாள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏல இனங்கள் | முன் மூன்று பசலிகளின் குத்தகைதொகை | | |
|---|---|---|---|---|
| | | பசலி 1429 | பசலி 1430 | பசலி 1431 |
| 1 | ஷ ஆலயத்திற்குப்பாத்தியப்பட்ட கருமகிரி பொட்டலில் மகமை வசூல் செய்யும் உரிமம் | 5,50,000/– | 3,47,000/– | 5,63,400/– |

ஆகவே 15.06.2022 அன்று நடைபெறவிருக்கும் பொதுஏலம்/டெண்டரில் சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் கலந்துகொள்ளதக்க உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொதுஏலம்/ டெண்டர் நோட்டீசுகளில் ஒன்றினை இணைஆணையர் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்திட பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

27/5/2022

இணைப்பு –

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது – மேதகுபரம்பரைஅறங்காவலர்/ராணி சாகிபாஅவர்கள், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம், சிவகங்கை

நகல் – உதவிஆணையர்,இ ச அ துறை, சிவகங்கை
இத்துடன்இணைக்கப்பட்டுள்ள ஏல நோட்டீசுகளில்ஒன்றை உதவிஆணையர்அலுவலக விளம்பரப்பலகையில் விளம்பரம் செய்திடகேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் – ஆய்வர், இ ச அ துறை, மானாமதுரை

நகல் – தேவஸ்தானகண்காணிப்பாளர்(பொ) திருப்புவனம் சரகம் – இத்துடன்இணைக்கப்பட்டுள்ள 4 ஏல நோட்டீசுகளையும் நன்கு முறைப்படி விளம்பரம் செய்தும், முன்பசலிகுத்தகை தாரர்களிடம்கையொப்பம்பெற்றும், அதில்ஒன்றை ஏல தேதிக்குமுன் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

நகல்–கட்டுக்கு

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில், திருப்புவனம்

1432ம் பசலி பொதுஏலம்/டெண்டர் அறிவிப்பு

ந க எண் டி4 980/2022 நாள் 26.05,2022

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோவிலுக்குப் பாத்தியமான கீழ்க்கண்ட குத்தகைஇனத்தினை 01.07.2022 முதல் 30.06.2023 முடிய 1432ம் பசலிக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமையினை 15.06.2022 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பொதுஏலம்/டெண்டர் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

| வ. எண் | ஏல இனங்கள் | டிபாசிட் தொகை ரூ.பை |
|---|---|---|
| 1 | கருமகிரி பொட்டலில் மகமை வசூல் செய்யும் உரிமம் | 2,50,000/– |

நிபந்தனைகள்

1. மேற்கண்ட குத்தகைகாலம் 1432ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.06.2023 வரை உள்ள காலத்திற்கு மட்டும்.
2. தேவஸ்தானம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மகமை கிருகை 1க்கு ரூ 50/–க்கு மேல் வசூல் செய்யக்கூடாது.
3. தர்பணம் ஒன்றுக்கு ரூ 20/–க்கு மேல் வசூல் செய்யக்கூடாது
4. கருமகிரி பொட்டலில் குத்தகைதாரரோ வேறு எந்த நபர்களும் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. ஆக்கிரமிப்பு செய்வதற்கு அனுமதிக்ககூடாது.
5. கருமகிரி மற்றும்தர்பணம் கிரிகை செய்யவரும் பொட்டலில் கிரிகை செய்யவரும் சேவார்த்திகள் வரிசையாகவும் முறையாகவும் கிருகை மற்றும் தர்ப்பனம் செய்யவேண்டும். இடையிடையே யாருக்கும் அனுமதி வழங்ககூடாது.
6. திருக்கோயில் அய்யர்களை தவிரவேறு அய்யர்களை கிருகை தர்ப்பனம் செய்யஅனுமதிக்க கூடாது.
7. ஷ கிரிகை பொட்டலை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.
8. கிருகைசெய்யவரும் பொதுமக்களிடம் மனித நேயத்துடனும் அன்பாகவும் நடந்துகொள்ள வேண்டியது.
9. கிருகை செய்யவரும் பொதுமக்கள் புகார் செய்தாலோ தேவஸ்தானம் சட்ட விதிகளை மீறி செயல்பட்டாலோ இந்துசமயஅறநிலையத்துறை இலாகா சட்ட விதிகளுக்குட்பட்டு ஷ குத்தகை ரத்து செய்ய நேரிடும் என்பதை அறியவும்.
10. பொதுஏலம்/டெண்டர் கேட்க விருப்பமுள்ளவர்கள் மேற்கண்ட ஏல இனத்திற்கு டிபாசிட் தொகைக்கு மேலாளர், சிவகங்கைதேவஸ்தானம் என முகவரியிட்டு வங்கிகேட்பு வரைவோலை ( டி டி ) மூலம் செலுத்தி ( சிவகங்கையில் மாற்றத்தக்கவகையில் ) அதற்கான ரசீதை டெண்டருடன் இணைத்து கொடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
11. முன்பசலிகளின் குத்தகை பாக்கிதாரர்கள் பொதுஏலம்/டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
12. 15.06.2022 முற்பகல் 10.30 மணி வரை டெண்டர் பெற்றுக்கொள்ளப்படும். முற்பகல் 11.00 மணிக்கு சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் முன்னிலையில் பொது ஏலம்/டெண்டர் நடத்தப்படும்.
13. டெண்டர்தாரர்கள் டெண்டரில் குறிப்பிடும் தொகையினை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தம் இல்லாமல் எழுதி கையொப்பம் மற்றும் தேதியிடல்வேண்டும். முன்னதாக திருக்கோயில் அலுவலகத்தில் ரூ 100 செலுத்தி டெண்டர் பாரம் 01.06.2022 முதல் 15.06.2022 முற்பகல் 10.00 மணி வரை சரகஅலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

14. ஏலத்தில் உயர்ந்த கேள்விக்குப்பின் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் டெண்டர்கள் திறக்கப்படும். பொதுஏலம்/டெண்டரில் உயர்ந்த கேள்வியாக கேட்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர்அவர்களின் ரத்து அங்கீகாரத்திற்கு உட்பட்டு டெண்டர்/பொதுஏலம் குத்தகை உரிமை முடிவு செய்யப்படும்.

15. உயர்ந்தகேள்விதாரர் டெண்டர்/ஏலத்தொகை முழுவதையும் உடன் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

16. உயர்ந்த கேள்விதாரர் நிபந்தனையின்படி ஏலத்தொகை செலுத்த தவறினால் மறுஏலம்/டெண்டர் நடத்தப்படும். அவ்விதம் நடத்தப்படும் மறுடெண்டர்/பொதுஏலம் குறைந்த தொகைக்கு சென்றால் டிபாசிட்தொகையை இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் முன்டெண்டர்தாரர் / ஏலதாரரிடம் வசூலிக்கப்படும். லாபம் ஏற்பட்டால் அதில் உரிமைகிடையாது.

17. கிரிகை மற்றும் தர்பணம் செய்யவரும் நபர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் குளிப்பதற்கான வசதிகள் குத்தகைதாரர்கள் செய்து கொடுக்க வேண்டும்.

18. டெண்டர்/பொதுஏலத்தை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஒத்திவைக்கவோ, ரத்து செய்யவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

19. டெண்டர்/பொதுஏலம் சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து அதிகாரத்திற்குட்பட்டது.

20. டெண்டர்/பொதுஏலம் உறுதி செய்து உத்தரவு பெற்றவுடன் டெண்டர்தாரர்/பொது ஏலதாரர் தனது சொந்தச்செலவில் 10 தினங்களுக்குள் ரூ 50/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். தவறினால் டெண்டர்/பொதுஏலம் நடத்தி அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு டெண்டர்தாரர்/ ஏலதாரர் பொறுப்பாக்கப்படும். டெண்டர்/ஏல நிபந்தனைகளை கூட்டவோ குறைக்கவோ மாற்றம் செய்யவோ டெண்டர்/ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

21. பொதுஏலம்/டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ஏலம் நிபந்தனைகளை தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படும்.

22. உரிமம் குத்தகைகளை இந்துசமயத்தினர் மட்டுமே ஏல/டெண்டர் எடுக்க அனுமதிக்கப்படுவர்.

23. ஷ திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்தவேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள் கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்படுபவர்கள் அல்லது மேலேகண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவர் என திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள், ,மற்றும் 21 வயது நிறைவுபெறாதவர்கள் ஏலம்/டெண்டர் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

24. ரூ 30,000/–க்கு மேல் குத்தகை எடுக்கும் குத்தகைதாரர்கள் 1% GST வருமான வரி செலுத்திடவேண்டும்.

25. பொதுஏலம்/டெண்டரில் கலந்துகொள்பவர்கள் ஆதார் நகல், பான்கார்டு நகல் இணைக்கவேண்டும்.

ஒம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

27/5/2022

27/5/2022